**நகராட்சி அலுவலகம்,**
**சாத்தூர்.**
**நாள்: 04.10.2021**

**சாத்தூர் நகர்மன்ற அவசரக் கூட்டம்**

**நிகழும் மங்களகரமான ஆண்டு பிலவ வருடம் புரட்டாசி 18 ஆம் நாள் 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 04 ஆம் நாள் திங்கள்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து அவசரக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் விவரம் பின்வருமாறு.**

**முன்னிலை : திரு.எம்.இளவரசன், பி.காம்.,**
**தனி அலுவலர்,**
**சாத்தூர் நகராட்சி.**

பொருள் எண்: 1

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2021–2022–ம் ஆண்டிற்கு நகராட்சிகளில் உள்ள தகன மேடைகளை நவீன எரிவாயு தகன மேடைகளாக மாற்றுவதற்கு நகராட்சி நிர்வாக துறை மானிய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.13–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சாத்தூர் நகராட்சிக்கு நவீன எரிவாயு தகன மேடை அமைப்பதற்கு ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய திட்ட கருத்துருவினை அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14006/2021/தி2 நாள்: 08.09.2021–ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உரிய திட்டகருத்துருவினை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

உரிய திட்ட கருத்துருவினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று சமர்ப்பித்தமைக்கு மன்றம் அனுமத்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.608/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 813, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 2

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலக மின்னஞ்சல் செய்தி நாள்:30.09.2021 சாத்தூர் நகராட்சி பகுதியில் கூடுதலாக மின்கம்பங்கள் மற்றும் மின்விளக்குகள் அமைப்பதற்கு உரிய திட்ட கருத்துருவினை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி சாத்தூர் நகராட்சி பகுதி மற்றும் விரிவாக்க பகுதிகளில் கூடுதலாக 265 LED விளக்குகள் மற்றும் மின்கம்பங்களுடன் அமைப்பதற்கு ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெற உரிய திட்ட கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெற உரிய திட்ட கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.761/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 814, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 3

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.24 சந்தனமாரியம்மன் கோவில் தெருவில் புதியதாக பகிர்மானக் குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள 27.08.2021–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. ஆர்.தாமோதரகண்ணன் – மதிப்பீட்டை விட 0.35 % குறைவு
2. பி.சுப்பாராஜ் – மதிப்பீட்டை விட 0.42% அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஆர்.தாமோதரகண்ணன் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.409/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 815, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 4

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.7 ஆண்டாள்புரம் தெருவில் புதியதாக பகிர்மானக் குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள 27.08.2021–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. ஆர்.தாமோதரகண்ணன் – மதிப்பீட்டை விட 0.42 % குறைவு
2. பி.சுப்பாராஜ் – மதிப்பீட்டை விட 0.52% அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஆர்.தாமோதரகண்ணன் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.410/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 816, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 5

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN 67BJ 4441 வண்டிக்கு தகுதி சான்று பெறும் பொருட்டு அதில் பழுது மற்றும் பாரமரிப்பு பணிகளை மேற்கொள்ள 11.08.2021–ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. ரகமதுல்லா ஆட்டோ ஒர்க்ஸ் – ரூ.15,120/–
2. சித்திக் ஆட்டோ மொபைல்ஸ் – ரூ.16,300/–

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ரகமதுல்லா ஆட்டோ ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பாதாளச் சாக்கடை பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.392/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 817, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 6

சாத்தூர் நகராட்சி பொதுபிரிவில் உள்ள ஈப்பு வாகனம் TN 67BA 5926 வாகனத்திற்கு புதிதாக AC இயந்திரம் பொருத்தும் பொருட்டு அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.60,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.573/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 818, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 7

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மேலக்காந்தி நகரில் உள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் பள்ளி கட்டிடம் பழுதுடைந்து சுற்றுசுவர் மோசமான நிலையில் உள்ளது. எனவே பள்ளிக்கு பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.10,00,000/— க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேற்கண்ட பணிகளை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.593/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 819, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 8

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2021—2022—ம் ஆண்டிற்கு நகராட்சிகளில் உள்ள விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காகள் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக துறை மானிய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.9—ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சாத்தூர் நகராட்சிக்கு கீழ்கண்ட மூன்று இடங்களில் விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காகள் அமைப்பதற்கு ரூ.127.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய திட்டகருத்துருவினை அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20028/2021/தி2 நாள்: 08.09.2021—ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உரிய திட்டகருத்துருவினை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காகள் அமைவிடங்கள்**

1. கோ— ஆப்ரேட்டிவ் சொசைட்டி காலனி — மதிப்பீட்டுத்தொகை ரூ.67.00 இலட்சம்
2. கோ—ஆப்ரேட்டிவ் சொசைட்டி காலனி குறுக்கு தெரு — மதிப்பீட்டுத் தொகை ரூ.30.00 இலட்சம்
3. நியூகாலானி — மதிப்பீட்டுத் தொகை ரூ.30.00 இலட்சம்

உரிய திட்ட கருத்துருவினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சமர்ப்பித்தமைக்கு மன்றம் அனுமத்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.609/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 820, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 9

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.35871/2014/இ1 நாள்: 08.09.2021-ல் நகராட்சி பகுதிக்குட்பட்ட தெருக்களில் உள்ள குழல் விளக்குகள் மற்றும் சோடியம் விளக்குகளை LED விளக்குகளாக மற்றம் செய்ய உரிய திட்ட கருத்துருவினை சமா்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்பொருட்டு சாத்தூா் நகராட்சிக்கு DARASHAW என்ற நிறுவனத்தின்மூலம் ரூ.76.64 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்க்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க உரிய திட்ட கருத்துருவினை சமா்ப்பிக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்கு மின்கம்பகளில் உள்ள குழல் விளக்குகள்மற்றும் சோடியம் விளக்குகளை LED விளக்குகளாக மற்றம் செய்ய சாத்தூர் நகராட்சிக்கு DARASHAW என்ற நிறுவனத்தின்மூலம் ரூ.76.64 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்க்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க உரிய திட்ட கருத்துருவினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சமர்ப்பித்தமைக்கு மன்றம் அனுமத்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.610/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 821, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 10

சாத்தூர் நகராட்சிக்கு புதிய பாதாளச் சாக்கடை திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Online Continuous Effluent Monitoring System (OCEMS) நிறுவவது அவசியமாகும். எனவே மேற்கண்ட பணியினை புதிய பாதாளச் சாக்கடை திட்டப்பணிகளிலே செய்து கொடுக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

பாதாளச் சாக்கடை திட்டப் பணியின் அவசியம் கருதி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Online Continuous Effluent Monitoring System (OCEMS) நிறுவவது அவசியமாவதால் அதற்கான நிதியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாருக்கு ஒதுக்கீடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2053/2006/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 822, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 11

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.158/2016/ஆ4, நாள்:18.08.2021ல் கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2021–2022ம் ஆண்டிற்கான பங்குத் தொகையை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பயிற்சி நிறு வனத்திற்கு இந்நகராட்சியில் இருந்து செலுத்த வேண்டிய நிர்வாகப் பங்குத் தொகை ரூ .30,000/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1696/2009/சி1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 823, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 12

சாத்தூர் நகராட்சியில் ஒவ்வொரு ஆண்டும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையினால் தணிக்கை மேற்கொள்ளப்படும் போது ஆண்டு கணக்கினை முடிப்பதற்கு ஏதுவாக பட்டயக்கணக்கர் ஒருவரை தணிக்கையின் போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 2020–2021ம் ஆண்டிற்கான கணக்கினை முடித்த வகைக்கு திரு.வி.சீனிவாசன், பட்டயக்கணக்கர் அவர்கள் ரூ.30,000/–க்கு பட்டியல் தொகை வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை ரூ.30,000/–ஐ திரு.வி.சீனிவாசன், பட்டயக்கணக்கருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.2129/2009/பி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 824, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 13

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பெரியார் நகர், சர்வே வார்டு – ஏ, பிளாக் – 9, நகரளவு எண்.105ல் உள்ள இடமானது மதுரை நகர் ஊரமைப்பு துறையின் அனுமதி பெற்ற மனைப்பிரிவு அனுமதி எண்.ம.ப./ம(இரா) எண்.80/84ன்படி சமுதாயக்கூடம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி பெற்ற மனைப்பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் நகராட்சிக்கு தான பத்திர எண்.106/1986, நாள்: 06.01.1992 மற்றும் 357/1986, நாள்: 06.01.1992ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் பூங்கா என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடம் நகரளவை ஆவணங்களில் பூங்கா என உட்பிரிவு செய்யப்பட்டு, தற்போது ஆணையாளர், சாத்தூர் நகராட்சி என உள்ளது. அதற்குரிய ஆவணங்கள் உடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்திற்கு தெற்கே நிலையிலுள்ள 9மீ. சாலை அணுகு சாலையாக உள்ளது. மேற்கே நிலையிலுள்ள 6மீ சாலை அணுகு சாலையாக உள்ளது. வடக்கே அனுமதி பெற்ற குடியிருப்பு மனைகளும், கிழக்கே காலியிடமும் உள்ளது. மேற்படி இடமானது சமுதாயக்கூடம் என ஒதுக்கீடு செய்யப்பட்ட 1986ம் ஆண்டிலிருந்து நாளது தேதி வரை சமுதாயக்கூட பயன்பாட்டில் இல்லாமல் காலியிடமாக உள்ளது. சமுதாயக்கூட பயன்பாட்டிற்கு என எவரும் கிரையம் பெற்று அபிவிருத்தி செய்ய நாளது தேதி வரை முன்வரவில்லை. மேலும் மேற்படி இடத்தில் இருந்து 1கி.மீ. சுற்றளவிற்குள் எஸ்.கே.பாரடைஸ் மஹால், ஜெயபிரியா ரெசிடென்சி மஹால், தேவர் மஹால் மற்றும் படந்தால் பகுதியில் ஆர்.கே.எஸ். திருமண மண்டபங்கள் பயன்பாட்டில் உள்ளன என்பதால் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தினை குடியிருப்பு மனைகளாக மாற்றம் செய்யக்கோரி உரிய வரைபடம் மற்றும் நிலஉரிமை ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்துள்ளார்.

மேலும் நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.2165/91/எல்.ஏ.1, நாள்: 30.05.1991ன் குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில் அனுமதி பெற்ற மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு செய்யப்பட்ட நில பயன்பாட்டிற்கான வளர்ச்சி ஏற்படவில்லை எனில் 5 ஆண்டுகளுக்கு பின்பு நில உரிமைதாரர் நில உபயோக மாற்றம் செய்ய வழிவகை உள்ளதால் மனுதாரர் நிலமாற்றம் கோரி (சமுதாயக்கூடம் உபயோகத்தில் இருந்து குடியிருப்பு மனைப்பிரிவு) விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். எனவே மனுதாரரின் விண்ணப்பத்தினை உரிய மேல் டவடிக்கைக்காக நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர், விருதுநகர் அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 825, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 14

இந்நகராட்சி அலுவலக உபயோத்திற்கு தேவையான பொருட்கள் பீரோ–1 எண்ணம், எஸ்.டைப். சேர் – 2 எண்ணம், ரேக் – 5 எண்ணம் ஆகியவற்றை இராமநாதபுரம் சர்வோதயா சங்கம், சாத்தூர் அவர்களிடம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.70,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 826, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்: 15

சாத்தூர் நகராட்சியில் பணிபுரியும் அனைத்துப் பிரிவுகளில் உள்ள குழாய் பொருத்துநர், கிளீனர், வாகன கிளீனர், வால்வு ஆப்பரேட்டர், காவலர்கள், ஓட்டுநர்கள், மகப்பேறு உதவியாளர்கள், மகப்பேறு ஆயாக்கள், அலுவலக உதவியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் அனைவருக்கும் 2021–2022ம் ஆண்டுக்கான சீருடைகள், காலணிகள் மற்றும் தையல் கூலிகள் வழங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3.00/–லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

2021–2022ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற கோ–ஆப்டெக்ஸ் மற்றும் காதிகிராப்ட் நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 763/2021/எச்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 827, நாள்: 04.10.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) எம்.இளவரசன், பி.காம்.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**